*கவனிக்க .- 2014.10.03 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1884 - 2014 ඔක්තෝබර් මස 10 වැනි සිකුරාදා - 2014.10.10

*1884 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1108 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும்

## வடமேல் மாகாண சபை அரச சேவையின் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்கு நெசவுக்கைத்தொழில் ஆலோசகர்களை (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்கு நெசவுக் கைத்தொழில் ஆலோசகர்களை (தரம் III ) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகைமை உள்ள வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடமுள்ள இலங்கை நாட்டின் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெற்றிட எண்ணிக்கை - 21

2. **சம்பளத்திட்டம் :**

2.1 அரச நிருவாக சுற்றுநிரூபம் 6/2006 (iv) இல் MN 1/2006A இன்படி இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பளப் பெறுமானம் ரூபா 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040.

**குறிப்பு.-**

(அ) இந்த சம்பளத்திட்டம் காலத்துக்குக்காலம் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு உட்படக்கூடியது. இந்த நியமனம் 3 வருடங்களைக் கொண்ட தகுதிகாண் நிலைக்கு உட்பட்டது. இந்த பதவிக்கு ஆட்சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போதும் உயர்வுகளை வழங்கும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள படி III ஆவது தரத்துக்கு ஆட்சேர்த்து 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். தரம் II இற்கு உயர்த்தப்பட்ட பிறகு 3 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்து இருக்க வேண்டும். தரம் I இற்கு உயர்த்தப்பட்டு 5 வருடங்களுக்குள் மூன்றாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும்.

(ஆ) அரச நிருவாக சேவை சுற்றுநிரூப இலக்கம் 01/2014 இற்கும் ஒப்பனை செய்யப்பட்ட சுற்று நிரூபத்துக்கும் அமைய பதவியில் சேர்ந்து 5 வருடம் பூர்த்தியாவதற்குள் அரச மொழியில் திறமை காட்ட வேண்டும்.

2.2 **வயதெல்லை.-** விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது 18க்கு குறையாமலும் 45 வயதுக்குக் மேற்படாமலும் இருக்க வேண்டும். தற்போது அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்த வயதெல்லை பொருத்தமாகாது. அவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள அதிகாரி மூலம் சிபாரிசு பண்ண வேண்டும்.

2.3 **சேவை நிபந்தனைகள்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உள்ளதுமாகும். தெரிவுசெய்யப்படுகின்ற ஆண் விண்ணப்பதாரிகள்/ பெண் விண்ணப்பதாரிகள் விதவை மற்றும் அநாதைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு வழங்க வேண்டும்.

(ii) தாபனக் கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 10 ஆவதும் 12 ஆவதும் உப அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளும் இந்தப் பதவிக்கு உரியதாகும்.

(iii) அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாண சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நியமிக்கப்படுகின்ற எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்ய உடன்படுதல் வேண்டும். இடமாற்றங்களுக்கு கட்டுப்பட வேண்டும்.

(iv) இந்தப் பதவிக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அறிவுறுத்தல்களுக்கும், நிதிப் பிரமாண அறிவுறுத்தல்களுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும், மாகாண நிதி நடவடிக்கைகளுக்கும், வடமேல் மாகாண நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் உயர்வு முறைக்கும் அரசாங்கம் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் வழங்கப்பட்டுள்ள அல்லது காலத்துக்குக்காலம் வழங்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கும் அல்லது கட்டளைகளுக்கு உடன்பட்டு வேலை செய்வதற்கு சகல உத்தியோகத்தர்களும் கட்டுப்பட்டுள்ளனர்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

3.1 கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்மொழி மற்றும் வேறு பாடங்கள் 2 இல் திறமைச் சித்தி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்திபெற்று இருத்தல் வேண்டும்.

அவற்றுள் ஒரு அமர்வில் குறைந்தபட்ச 3 திறமைச்சித்திகளுடன் கணித பாடத்துடன் 6 பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும்.

அத்துடன்,

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உ.த.) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

3.2 **தொழில் தகைமைகள்.-** நெசவுத்தொழில் திணைக்களத்தில், பயிற்சி நிறுவனமொன்றில் இது சார்பாக பயிற்சி பெற்று நெசவுக்கைத்தொழிலில் இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**க. வே.-** மேற்படி எல்லா கல்வி, தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் 2014.11.10 ஆந் திகதிக்கு பூரணப்படுத்தி, சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

4. **அபேட்சகர்கள் :**

4.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

4.2 சிறந்த நடத்தையுடன் கூடிய நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

4.3 பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக தேவைப்படுகின்ற சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்படவேண்டும் என விண்ணப்பம் கோரும் வர்த்தமானிப் பத்திர அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அந்த தகைமைகளை சகல வழிகளிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

5. **பதிவு செய்யும் முறை.-** வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது பொறுப்பு கொடுக்கப்படுகின்ற நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற எழுத்துப் பரீட்சையில் சித்திபெறும் அபேட்சகர்கள் செய்முறை பரீட்சைக்கு உள்ளாக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையிலும் செய்முறை பரீட்சையிலும் புள்ளி அடிப்படையிலும் பதவி வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்பவும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள், நெசவுக்கைத்தொழில் ஆலோசகர்கள் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

6. **பரீட்சை முறை.-** பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாது.

பாடங்கள் :

(i) எழுத்துப் பரீட்சை

| பாடங்கள் | காலம் | புள்ளி | பெற்ற புள்ளி | பாடத்திட்டம் |
|---|---|---|---|---|
| நெசவுப்பதிவுகள் | 1 மணி 30 நிமி. | 100 | 40 | கைத்தறி புடைவை நெய்யும் போது பாவிக்கும் எல்லா பின்னல் முறைகளும் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும். |
| இயந்திர பதிவுகள் | 1 மணி 30 நிமி. | 100 | 40 | கையியந்திரம் ஒன்றின் உதிரிப் பாகங்கள் மற்றும் உபகரணங்கள் அடையாளம் காணும்போது மற்றும் அவற்றை பாவிக்கும் முறை பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும். |
| நெசவுக்கணிதம் | 1 மணி 30 நிமி. | 100 | 40 | கைத்தறிப் புடைவை உற்பத்தியில் பாவிக்கும் கணித முறைகள் பற்றி அறிவு பரீட்சிக்கப்படும். |
| பொது அறிவு | 1 மணி 30 நிமி. | 100 | 40 | கைத்தறிப் புடைவைகள் உற்பத்தியின் வரலாறு, புதிய திறமைகள், விளம்பரப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் அடங்கலாக கைத்தறி புடைவை கைத்தொழில் பற்றிய பொது அறிவு பரீட்சித்தல். |

மேற்காணும் ஒவ்வொரு பாடத்துக்கும் பொருத்தமான வினாப்பத்திரங்கள் 4 தயாரிக்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தி அடைகின்ற அபேட்சகாக்ள் செய்முறை பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(ii) செய்முறைப் பரீட்சை

| பாடம் | காலம் | புள்ளி | பெற்ற புள்ளி | பாடத்திட்டம் |
|---|---|---|---|---|
| பரீட்சை | 30 நிமி. | 100 | 40 | 1. கைத்தறி புடைவை செய்தல், அலங்கார ஆக்கம், கைத்தறி இயந்திரமொன்றை நெய்வதற்கு ஆயத்தமாக்குதல், அதற்காக பாவிக்கும் உபகரணங்கள் பற்றிய செய்முறை அறிவு பரீட்சித்துப் பார்த்தல்.<br>2. வழங்கப்படுகின்ற காலத்துக்குள் இயந்திர மயப்படுத்தப்பட்ட தறியொன்றில் வழங்கப்பட்ட அலங்காரமொன்றை நெய்வதற்கு ஏற்பாடு செய்தல், நெய்யப்பட்ட அளவுகளுக்கு புள்ளி வழங்கப்படும். நெய்யும்போது ஏற்படும் குறைகளுக்காக புள்ளிகள் குறைக்கப்படும். (பழுது, ''ரீட் மார்க்'', கால் கம்பு மிதிக்கும் போது ஏற்படும் தவறு, ஷட்டல் விழுதல் போன்றன. |

7. பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண சபை கணக்கில் வரவு செய்யப்படும் படியாக தாம் வதியும் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கியுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு பத்திரத்தை விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு தவிர வேறு பற்றுச்சீட்டு அல்லது மணி ஓடர்கள் எதுவும் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் வழங்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் திருப்பி மீளளிக்கப்படமாட்டாது என்பதை கருத்திற்கொள்க.

8. **விண்ணப்பிக்கும் முறை**.-

8.1 இந்த அறிவித்தலின் கீழ் உள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப, A4 அளவிலான ( 21 × 29 செ. மீ.) கடதாசியில் இரு பக்கங்களையும் பாவித்து இல. 01-05 வரை முதலாம் பக்கத்திலும் 6 தொடக்கம் ஏனைய பந்திகள் ஏனைய பக்கங்களுக்கும் உள்ளடக்கப்படும்படியாக விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 2014.11.10 ஆந் தினத்தன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு செயலாளர், வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு, மாகாண அலுவலக பல்கூட்டுத்தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''நெசவுக்கைத்தொழில் ஆலோசகர் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு 2014'' என குறிப்பிடப்படல் வேண்டும். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் நிரந்தரமாக உள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பத்தை திணைக்கள அதிகாரி மூலம் அனுப்ப வேண்டும்.)

8.2 **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- இந்த சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/யுத்தப்படை அல்லது வான்படை அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது 20,040 ரூபா மாதாந்த திரட்டுச் சம்பளம் பெறும் நிரந்தர நியமனம் பெற்றுள்ள அரச/வடமேல் மாகாண சேவையின் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2014.11.10 ஆகும்.

10. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு புறம்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக பிரவேச அட்டை வழங்குதல் விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தகைமை பெற்றுள்ளமை என எண்ணுதல் கூடாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றிய பின்பு தெரிவு செய்யப்பட்டு, தகைமைகள் பரீட்சிக்கப்படும் போது, அவசியமான தகைமைகள் இல்லையென ஒப்புவிக்கப்பட்டால், அவர்களுடைய பதவி பெறும் வாய்ப்பு செல்லுபடியாகாது. எல்லா விண்ணப்பதாரியும் உரிய எல்லா தகைமைகளும் விண்ணப்ப இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.

11. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் சகல, பாடங்கள் சார்பாக தமது ஆளடையாளத்தை பின்வரும் ஒன்றின் மூலம் பரீட்சை நோக்குநருக்கு உறுதிப்படுத்த வேண்டும் :-

(1) ஆட்பதிவு செய்யும் திணைக்களம் மூலம் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு**.- பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு பொருத்தமற்றவர்கள் என கருத்தில் கொள்ளப்படும்.

12. யாராவது ஒரு விண்ணப்பதாரிக்கு நுழைவுச்சீட்டு, பரீட்சைக்கு 7 நாட்களுக்கு முன்பு கிடைக்காது போனால் அது பற்றி உடனடியாக செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை, மாகாண சபை அலுவலக பல் கூட்டுத்தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு அறிவிக்கவேண்டும். அந்த அறிவித்தலுடன் பின்னர் பின்வரும் விடயங்களை வழங்க வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயரும் விலாசமும் ;
(இ) விண்ணப்பத்தை அனுப்பி வைத்த முகவரி, பதிவுத் தபால் எண், தபாற்கந்தோர் மற்றும் திகதி.

13. யாராவது பரீட்சார்த்தி ஒருவர், தகைமை அற்றவர் என பதவி பெற முன்னர், ஏதாவதோர் சந்தர்ப்பத்தில், வெளிப்படுமானால், விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். பதவி பெற்றதன் பின்பு பிழையான தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றோ அல்லது உண்மையான தகவல் வேண்டுமென்று மறைக்கப்பட்டுள்ளது என்றோ வெளியாகும் பட்சத்தில், சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவர்.

14. தற்போது தெரிவிக்கப்பட்டுள்ள வெற்றிடங்கள், மற்றும் பிற்காலத்தில் உருவாகும் வெற்றிடங்கள் இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இருப்பாரேயாயின், அவர்கள் மூலம் வெற்றிடம் நிரப்பும் உரிமையும், விண்ணப்பதாரிகளை நிராகரிக்கும் உரிமையும், வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

காந்தி வெஹேல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலக பல் கூட்டுத்தொகுதி,
குருநாகல்,
2004.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சை எண் :- ☐

(அலுவலக உபயோகத்திற்கு)

**வடமேல் மாகாண சபை அரச சேவையின் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்கு ஆலோசகர்களை (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2014**

1. 1.1 முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.2 முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்):----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.4 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   1.5 தேசிய அடையாள அட்டை இல. :- ☐☐☐☐☐☐☐☐☐☐
2. 2.1 நுழைவுச்சீட்டு அனுப்ப வேண்டிய முகவரி :----.
   2.2 நிரந்தர முகவரி :----.
   2.3 தொலைபேசி எண் :- சொந்த :----. தொழில் :----.
3. ஆண்/பெண் தன்மை (பொருத்தமான கூட்டில் ✓ இடவும்)

   பெண் ☐ ஆண் ☐
4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (பொருத்தமான கூட்டிற்குள் ✓ இடுக.)

   சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐
5. பிறந்த திகதி :-
   ஆண்டு :---- மாதம் :----, திகதி :----.

   5.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2014.11.10 அன்று வயது :
   வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :-

(விண்ணப்பம் கோரும் அறிவித்தல் 3.1 இன் அடிப்படையில்)

(அ) (i) க. பொ. த. (சா.த.) பரீட்சைக்கு தோற்றிய வருடம் :

(ii) பரீட்சை சுட்டெண் :

| பாடம் | பெற்றுக்கொண்ட பெறுபேறு | | பாடம் | பெற்றுக்கொண்ட பெறுபேறு | |
|---|---|---|---|---|---|
| | முதலாம் தடவை | இரண்டாம் தடவை | | முதலாம் தடவை | இரண்டாம் தடவை |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(ஆ) (i) க. பொ. த. (உ.த.) பரீட்சைக்கு தோற்றிய வருடம் :

(ii) பரீட்சை சுட்டெண் :

| பாடம் | பெற்றுள்ள பெறுபேறு | பாடம் | பெற்றுள்ள பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(இ) தொழில் தகைமை (அறிவித்தலில் இலக்கம் 3.2 இன் கீழ் கற்றுள்ள பாடநெறி பற்றி தெளிவாக குறிப்பிடுக.) இந்த தகவல்கள் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிடப்படாவிடின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | கால வரையறை | பெறுபேறு | சான்றிதழின் இலக்கம், திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.

திகதி :----.

பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் :----.

| பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். |
|---|

8. .................................... ஆகிய நான் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் ஆகும் என குறிப்பிடுகிறேன். என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பிழையானவை என கண்டுபிடிக்கப்பட்டால், வடமேல் மாகாண நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் தரம் III பதவிக்கு நியமனம் செய்வதற்காக எனது உரிமை மறுக்கப்படுமெனவும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நான் ஆளாவேன் எனவும் நான் நன்றாக தெரிந்து வைத்துள்ளேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-**

(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடுக.)

இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ..................................... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் ...................... தினத்தன்று எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்று பகர்கிறேன்.

-----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவியும் /முத்திரையும் :----.

(இந்த சான்றிதழை அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமான ஆணையாளர்/சட்டத்தரணி/யுத்தப்படையின் அல்லது வான்படையின் அதிகாரி ஒருவர் மூலம் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவர் 20,040 ரூபாவை ஒன்று சேர்க்கப்பட்ட மாதாந்த வருமானமாகப் பெறும் நிரந்தர பதவியுள்ள அரச/மாகாண சேவையிலுள்ள அலுவலர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

அரசாங்கத்தில் அல்லது மாகாண சபை சேவையில் தற்போது சேவையிலுள்ள விண்ணப்பதாரிக்கான திணைக்கள அதிகாரியின் சிபாரிசு :

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ............................................ இந்தத் திணைக்களத்தில் சேவையில் உள்ள ஒருவர் எனவும். அவர் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவர் எனவும், இந்தப் பரீட்சையின் பெறுபேற்றுக்கு ஏற்ப நியமனம் பெற தேர்ந்து எடுக்கப்படுவாரே ஆயின் அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார் எனவும், பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா செலுத்தி அதன் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் ஒட்டி உள்ளார் எனவும் அவரால் விண்ணப்பப்படிவத்தில் கூறப்பட்டுள்ள விபரங்களை இந்தத் திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்த்து உள்ளேன் எனவும் இந்த பரீட்சைக்கு உரிய பரீட்சை அறிவித்தலில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் பொருத்தமானவர் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

---------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.
(இலச்சினையை இடுக.)

10-373

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.